தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 18, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 டிசம்பர் 4, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர். செங்காளியப்பன் அவர்கள் 14–9–2006 அன்றும், திரு. வெ. பாலகுரு அவர்கள் 23–9–2006 அன்றும், திரு. ஜி.டி. பெருமாள் ராஜு அவர்கள் 25–10–2006 அன்றும், திரு. பெ. செங்கோட்டையன் அவர்கள் 26–10–2006 அன்றும், திரு. டி.டி.எஸ். திப்பையா அவர்கள் 11–11–2006 அன்றும், திரு. பா. நாகலிங்கம் அவர்கள் 1–12–2006 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆர். செங்காளியப்பன் அவர்கள் 1962 முதல் 1967 வரை பல்லடம் தொகுதியிலிருந்தும், 1985 முதல் 1988 வரை சிங்காநல்லூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 4

திரு. வெ. பாலகுரு அவர்கள் சோழவந்தான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஜி.டி. பெருமாள் ராஜு அவர்கள் அந்தியூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பெ. செங்கோட்டையன் அவர்கள் கபிலர்மலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டி.டி.எஸ். திப்பையா அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பா. நாகலிங்கம் அவர்கள் பொன்னேரி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 மற்றும் 1971 முதல் 1976 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)